## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## MCOP. No.401/2023

2026–ம் வருடம் பிப்ரவரி திங்கள் 09–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: அமீரலிகான்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். ம.சா.2 அமீரலிகான் பெயரில் உள்ள ஆதார் அட்டை புகைப்பட நகல் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரர் மனுவில் கோரியபடி உத்திரவாக வேண்டுகிறேன்.

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் வாளையாறு. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். வாளையாறு ஆர்டிஓ ஆபீஸ் முன்பு ஒரு லாரி நின்று கொண்டிருந்தது. அதன் பின்னால் வந்த கோழி ஏற்றி வந்த ஈச்சேர்

வாகனம் அதில் மோதி விபத்து ஏற்பட்டது. நின்று கொண்டிருந்த லாரியின் பதிவு எண் எனக்கு ஞாபகமில்லை. ஈச்சேர் வண்டியின் பதிவு எண். TN88F1338, விபத்தின் போது ஈச்சேர் வாகனத்தில் 3 நபர்கள் இருந்தார்கள் அதில் ஒருவருக்கு பலமாக காயம் ஏற்பட்டிருந்தது. விபத்தின் போது ஈச்சேர் வண்டி கோழி இறக்கி விட்டு திரும்ப செல்லும் காலிவண்டியாகும். விபத்தில் அடிப்பட்டவரை நான் ஆம்புலன்சில் ஏற்றிவிட்டேன். விபத்து குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். நீங்கள் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் மனுதாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.09 17:45:07 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.